**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, SINGAMPUNARI**

**C.C. No. 135/2019 PW . 2**

| | |
|---|---|
| **பெயர் : சண்முகம்** | **தந்தை/கணவர் பெயர்: பெரியகருப்பன்** |
| **ஊர் :** | **தாலுகா:** |
| **வயது :** | **தொழில்:** |
| **ஜாதி :** | **சமயம்:** |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 25.06.2025

---

**(எதிரி ஆஜரில்லை. எதிரி சார்பில் கு.வி.மு.ச. பிரிவு 317ன் கீழ் மனு தாக்கல்செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது).**

**25.06.2025 முதல் விசாரணை:**

1. நான் தற்போது மணக்குடி கிராமத்தில் குடியிருக்கிறேன். விவசாயம் தொழில் செய்கிறேன். விபத்தில் காயம்பட்டு இறந்த செந்தில்குமார் எங்கள் ஊரை சேர்ந்தவர். 12.05.2013ம் தேதி மாலை சுமார் 3 மணியளவில் சிங்கம்புணரிக்கு சென்று சாமான்கள் வாங்குவதற்காக எங்கள் ஊரிலிருந்து சென்று கொண்டிருந்த போது சிலநீர்பட்டி பாலம் அருகே நான் கிழக்கு – மேற்காக சிங்கம்புணரிக்கு வந்து கொண்டிருந்தேன். அப்போது திருப்பத்துார் - சிங்கம்புணரி நோக்கி வந்த சீட்டட் வேன் செந்தில்குமார் மீது மோதி விபத்து ஏற்பட்டது. வாகனம் மோதியதில் செந்தில்குமாருக்கு காலில் காயம்பட்டு இரத்தம் வந்தது. மோதும் போது டப் என்று சத்தம் கேட்டது. ரோட்டின் இடது ஓரமாக சென்று கொண்டிருந்த செந்தில்குமார் மீது வேகமாக வந்து வேன் மோதியதால் விபத்து ஏற்பட்டது. மேற்படி மோதிய வாகனத்தின் பதிவெண் ஞாபகமில்லை. சம்பவ இடத்தில் வைத்து வாகனத்தை ஓட்டிய நபரை பார்த்தேன். தற்போதுஎன்னால் அடையாளம் காட்டமுடியாது. 108 ஆம்புலன்சு வந்த பிறகு செந்தில்குமாரை ஏற்றி சிங்கம்புணரி அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றார்கள். பின்னர் மருத்துவமனையில் இருந்த போது இறந்துவிட்டதாக தகவல் கேள்விப்பட்டேன். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:**

2. இறந்தவர் எனக்குநெருங்கிய உறவினர் என்றால் எங்கள் ஊரை சேர்ந்தவர். உறவினர் கிடையாது. போலீசார் விசாரணையில் இறந்தவர் உறவினர் என்று நான் சொல்லவில்லை. மணக்குடியிலிருந்து மணக்குடி, மருதிப்பட்டி விலக்கு, சிலநீர்பட்டி விலக்கு ஆகிய ஊர்களை தாண்டி வரவேண்டும் என்றால் சரிதான். அது போக 2, 3 விலக்குகள் வழியில் உள்ளது. மருதிப்பட்டி விலக்கு – சிலநீர்பட்டி விலக்கிற்கு இடைப்பட்ட இடத்தில் விபத்து நடந்தது என்றால் சரியல்ல. சிலநீர்பட்டி விலக்கு தாண்டி விபத்து நடந்தது. மருதிப்பட்டியிலிருந்து சிலநீர்பட்டிக்கு வரவேண்டும் என்றால் 4, 5 வளைவுகள், இருபக்க மரங்கள் உள்ளது என்றால் மரங்கள் உள்ளது. 4, 5 வளைவுகள் உள்ளதா என்பதை நான் கவனிக்கவில்லை. மேற்படி சாலையில் அதிக போக்குவரத்து உள்ள நெருங்கமான சாலை என்றால் சரிதான். மருதிப்பட்டி விலக்கு – சிலநீர்பட்டி

விலக்கிற்கு நடந்து வரவேண்டும் என்றால் அரை மணி நேரத்திற்கு மேலாகும். பைக்கில் வந்தால் 10 நிமிடத்தில் வரலாம். அவற்றிக்கிடையே 1 கி.மீ தூரம் உள்ளது. சிலநீர்பட்டி விலக்கு அருகே பஸ்ஸ்டாப் கிடையாது. அதன் அருகில் செங்கல் சேம்பர் உள்ளது என்றால் சரிதான். மேற்படி செங்கல்சேம்பரில் வேலை செய்யும் நபர்களுக்கு சிலநீர்பட்டி பஸ்ஸ்டாப் அருகில் உள்ளது என்றால் சரிதான். விபத்து நடந்த பகுதி வளைவான பகுதி என்றால் சரிதான்.

3. விபத்தை ஏற்படுத்திய வாகனத்தை நான் 10 அடி துாரத்தில் பார்த்தேன். மேற்படி வாகனத்திற்கு முன்னால் ஆர்வி பஸ் போனது. வளைவான பகுதி என்பதால் எதிர்புறம் வருகின்ற வாகனங்களை பார்க்கமுடியுமா என்றால் சைடு கண்ணாடி வழியாக பார்க்கமுடியும். இறந்தவர் ஓட்டிய வாகனத்திற்கு முன்னால், பின்னால் வாகனம் வந்ததா என்றால் இல்லை. விபத்துக்கு முன்பாக மேற்படி வாகனத்திற்கு முன்பு ஒரு பேருந்து கடந்து சென்றது. பேருந்து சிலநீர்பட்டி விலக்கில் நிறுத்தி ஆட்கள் ஏற்றி வருவார்கள் என்றால் சரிதான். சம்பவம் இடத்திற்கு சத்தம்கேட்டு நான் செல்லும் போது பேருந்தில் இருந்த பயணிகள் அனைவரும் வந்துவிட்டார்கள். பக்கத்தில் இருந்தவர்களும் வந்துவிட்டார்கள். விபத்தை ஏற்படுத்தியதாக சொல்லப்படும் வாகனத்தில் பயணம் யாரேனும் செய்தார்களா என்பதையும், அவர்கள் இறங்கிவிட்டார்களா என்பதையும் நான் பார்க்கவில்லை. விபத்து சமயத்தில் என்னிடம் போன் இருந்ததா என்றால் இல்லை. விபத்து சம்பந்தமாக இறந்தவரின் அப்பாவுக்கு தகவல் சொன்னேன். எங்கள் சேர்ந்தவர் மூலம் தகவல் சொன்னேன். இறந்தவர் தந்தை போன் எண்ணை தெரிந்தவர் மூலமாக கேட்டு தகவல் சொன்னேன். சம்பவ இடத்தில் எனக்கு தெரிந்தவர்கள் யாரும் இல்லை. ஆம்புலன்சுக்கு யார் தகவல் சொன்னார்கள் என்றால் தெரியாது. நான் தகவல் கொடுக்கவில்லை. விபத்தில் சிக்கிய இரு வாகனத்திற்கு எங்கு சேதம் ஏற்பட்டது என்றால் நான் அடிப்பட்டவரை காப்பாற்ற நினைத்தேன். சாலையில் இரத்தக்கறை இடது பக்கமாக இருந்தது. இறந்தவருக்கு குடிப்பழக்கம் உண்டா என்றால் நான் பார்த்ததுகிடையாது. அதே திசையில் காவல்நிலையம் உள்ளதா என்றால் உள்ளது. 3 கி.மீ தள்ளி உள்ளது. போலீசார் 5 நிமிடத்தில் வந்துவிட்டார்கள். போலீசார் என்னை விசாரித்தார்கள். விபத்து எப்படி நடந்ததுஎன்று கேட்டார்கள்.

4. எனக்கு தெரிந்த நபர்கள் யாரும் அங்கு இல்லை. அதனால் விசாரிக்கவில்லை. போலீசார் விசாரணையில் விபத்து எப்படி நடந்தது என்று குறிப்பிட்டு சொல்லவில்லை. கண்ணால் பார்த்ததை சொன்னேன். சாலை வளைவான சாலைகளும், போக்குவரத்து நெருக்கமான சாலை என்பதால்சிங்கம்புணரி நோக்கி செல்கின்ற எதிரி வாகனத்தை ஓட்டுவதற்கு வாய்ப்பில்லை என்றும் மேலும் விபத்து நடந்த பகுதி வளைவான பகுதி என்பதாலும் அதற்கு முன்னே பேருந்து சென்றுகொண்டிருந்தாலும் எதிரி தனது வாகனத்தை வேகமாக செலுத்துவதற்கு வாய்ப்பில்லை என்றும் இறந்தவர் வளைவான பகுதியில் உள்ள பஸ் ஸ்டாப் பேருந்தை முந்தி விரைவாக செல்வதற்காக முயற்சி செய்து எதிரி ஓட்டி வந்த வாகனத்தின் மீது மோதி விபத்தை ஏற்படுத்தி இறந்துவிட்டார் என்றால் சரியல்ல. நான் இறந்தவரின் உறவினர் என்பதால் அவருக்கு ஆதரவாக இழப்பீடு பெறுவதற்கு ஏதுவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் விபத்து நேரடியாக பார்க்கவில்லை என்றாலும் விபத்து நடந்த பிறகு சம்பவ இடத்திற்கு சென்று

பார்த்தேன் என்றால் சரியல்ல. நான் இறந்தவரின் உறவினர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, SINGAMPUNARI**

**C.C. No. 135/2019 PW . 3**

| | |
|---|---|
| **பெயர் : பெரியசாமி** | **தந்தை/கணவர் பெயர்: ராமசாமி** |
| **ஊர் :** | **தாலுகா:** |
| **வயது :** | **தொழில்:** |
| **ஜாதி :** | **சமயம்:** |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 25.06.2025

---

**(எதிரி ஆஜரில்லை. எதிரி சார்பில் கு.வி.மு.ச. பிரிவு 317ன் கீழ் மனு தாக்கல்செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது).**

**25.06.2025 முதல் விசாரணை:**

1. நான் தற்போது மணக்குடி கிராமத்தில் வசிக்கிறேன். விவசாயம் தொழில் செய்கிறேன். விபத்தில் இறந்த செந்தில்குமார் எங்கள் ஊரை சேர்ந்தவர். சுமார் 10-13 வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் நான் சிங்கம்புணரிக்கு வந்து சாமான்கள் வாங்கிக்கொண்டு என்னுடைய டிவிஎஸ் எக்ஸ்எல் வாகனத்தில் எங்கள் ஊருக்கு திரும்பி கொண்டிருந்தேன். மாலை சுமார் 3 மணிக்கு சீடடட் வேன் சிலநீர் பட்டி விலக்கு அமைந்திருக்கும் எதிரே உள்ள புளியமரத்திற்கு அருகில் காயம்பட்ட செந்தில்குமார் மீது மோதி விபத்து ஏற்பட்டது. விபத்தை ஏற்படுத்திய வண்டியின் பதிவெண் எனக்கு மறந்துவிட்டது. விபத்தை ஏற்படுத்திய வாகனத்தை ஓட்டிய ஓட்டுநரை நான் பார்க்கவில்லை. அவர் விபத்தை ஏற்படுத்திவிட்டு ஓடிவிட்டார். வேன் ஓட்டுநர் தவறான பாதையில் சென்றதால் விபத்து ஏற்பட்டது. நான் சுமார் 200 அடி துாரத்தில் இருந்து விபத்தை பார்த்தேன். செந்தில்குமாருக்கு உடம்பில் நிறைய இடங்களில் காயம்ஏற்பட்டது. பின்னர் 108 ஆம்புலன்சில் ஏற்றி சிங்கம்புணரி அரசு மருத்துவமனைக்கு கொண்டுசென்றார்கள். அதன் பிறகு நான் மருத்துவமனை வந்த போது இறந்துவிட்டதாக சொன்னார்கள். போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:**

2. நான் கோயம்புத்துார் மில்லில் வேலை பார்க்கிறேன் என்றால் இல்லை. இறந்தவர் எனக்கு மாமா-மச்சான் முறை. விபத்து நடந்த பகுதி வளைவான பகுதி என்றால் தெரியாது. எனது வாகனத்தில் நான் தனியாக சென்றேன். நான் போகும்போதே வேனை பார்த்துக்கொண்டு தான் சென்றேன். டம் என்று சத்தம் கேட்டேன். எனக்கு பின்னால் வந்து என்னை கிராஸ் செய்து வேன் முன் சென்றது. நான் சிங்கம்புணரியிலிருந்து விவசாய பொருட்களை வாங்கிக்கொண்டு எங்கள் ஊருக்கு சென்றதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். விபத்தில் சிக்கிய வாகனங்களுக்கு எங்கு சேதம் ஏற்பட்டது என்பதை நான் பார்க்கவில்லை. வேனிற்கு முன்னால், பின்னால் எந்த வாகனம் சென்றது என்றால் வாகனங்கள் வந்துகொண்டும், சென்றும் கொண்டும்இருந்தது. சம்பவ இடத்தில் பேருந்து நிறுத்தம் உள்ளது. வழக்கின்படி விபத்து நடந்த இடத்தில் வேன் எதிரே வந்தது என்றால் சரியல்ல. நான் சம்பவ இடத்திற்கு செல்லவில்லை என்றாலும் சம்பவத்தை நான் பார்க்கவில்லை என்றாலும்

சரியல்ல. நான் உறவினர் என்பதால் அவருக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, SINGAMPUNARI**

**C.C. No. 135/2019 PW . 4**

**பெயர் : கார்த்திகேயன் தந்தை/கணவர் பெயர்: சேதுராமன்**

**ஊர் : தாலுகா:**

**வயது : தொழில்:**

**ஜாதி : சமயம்:**

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 25.06.2025

---

**(எதிரி ஆஜரில்லை. எதிரி சார்பில் கு.வி.மு.ச. பிரிவு 317ன் கீழ் மனு தாக்கல்செய்யப்பட்டு**

அனுமதிக்கப்பட்டது).

__25.06.2025 முதல் விசாரணை:__

1. நான் தற்போது மணக்குடி கிராமத்தில் வசிக்கிறேன். எலக்டீரிசியன் தொழில் செய்கிறேன். 12ம் வகுப்பு படித்திருக்கிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வைமகசரில் உள்ள 1வது கையொப்பம் என்னுடையது தான். **அந்த கையொப்பம் மட்டும் அத.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** 12.05.2013ம் தேதி எனது உடன்பிறந்த அண்ணன் செந்தில்குமாருக்கு விபத்து நடந்ததை கேள்விப்பட்டு மருத்துவமனைக்கு நான் சென்ற போது அங்கு மருத்துவர்கள் என்னிடம் கையொப்பம் பெற்றார்கள். என்னிடம் காட்டப்படும் அ.த.சாஆ.1ல் உள்ள அறிவேன் சாட்சி கையொப்பம் என்னுடையது தான். மேலும் சம்பவ இடத்தில் வைத்து பார்வை மகசரில் கையொப்பம் செய்தேன். என்ன உறவு முறை என்று கேட்டு பார்வை மகசரில் கையொப்பம் பெற்றார்கள். வேறு ஆவணம் தயார் செய்தார்களா என்றுஎனக்கு தெரியாது. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

__அரசு தரப்பில் சாட்சியை பிறழ்சாட்சியாக மாற்ற அனுமதி கோரி அனுமதிக்கப்படுகிறது.__

__அரசு தரப்பு குறுக்கு விசாரணை:__

2. அ.சா.1 எனதுஅப்பா ஆவார். விபத்து சம்பந்தமாக நானும், எனதுஅப்பா காவல்நிலையத்திற்கு சென்று புகார்கொடுத்தோம் என்றால் சரிதான். அப்போது செய்தது தான் அ.த.சா.ஆ.1ல் உள்ள கையொப்பம் ஆகும். அதன் பிறகு அன்றைய தினமே மாலை 6 மணிக்கு சம்பவ இடத்தில் வைத்து கையொப்பம் பெற்றார்கள். சம்பவ இடத்தில் வைத்து போலீசார் வரைபடம் தயார் செய்தார்களா என்றால் அது பற்றி தெரியாது. எழுதி இருந்த பேப்பரில் கையொப்பம் வாங்கினார்கள். 12.05.2013ம் தேதி மாலை 6மணிக்கு போலீசார் சம்பவ இடத்தில் வரைபடம் தயார் செய்து விசாரணை செய்த போது என்னிடமும், சாட்சி இராமநாதன் என்பவரிடமும் பார்வை மகசரில் சாட்சி கையொப்பம் பெற்றார்கள் என்றால் சரியல்ல. பார்வை மகசரில் கையொப்பம் செய்த இராமநாதன் எனது அண்ணன். தற்போது வெளிநாட்டில்வேலை செய்கிறார். 5 வருடத்திற்கு ஒரு முறை தான் ஊருக்கு வருவார்.

__எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:__

3. விபத்து கேள்விப்பட்டு நானும், எனது அப்பாவும் மருத்துவமனைக்குசென்றோம். அங்கு போலீசார் வந்திருந்தார்கள். அங்கு போலீசார் என்னிடமும், அப்பாவிடமும் புகாரில் கையொப்பம் வாங்கினார்கள். மேற்படி புகாரை போலீசார் எழுதினார்கள். அதன் பிறகு போலீசார் காவல்நிலையத்தில் வைத்து விசாரித்தார்கள். எனது முன்னிலையில் வரைபடம் வரையவில்லை. எனது அண்ணனுக்கு குடிப்பழக்கம் இல்லை. செக்யூரிட்டி மற்றும் டிவி மெக்கானிக் வேலை செய்து வந்தார். புகாரில் என்ன எழுதியிருந்தது என்று தெரியாது. அவருக்கு சிப்ட் மாறி மாறி வரும். சம்பவதன்று தனது செக்யூரிட்டி வேலை முடித்து வந்துகொண்டிருந்தார். செக்யூரிட்டி வேலை என்பது தூங்காமல் காவல் காக்கவேண்டும்என்றால் சரிதான். அவர் வேலை முடித்துவிட்டு வீட்டிற்கு வந்தவுடன் தூங்கிவிடுவார். அவர் சிப்ட் வேலை முடித்துவிட்டு தூக்க கலக்கத்தில் வாகனத்தை ஓட்ட வாய்ப்புள்ளது என்றால் இல்லை. சிப்ட் முடித்து வீட்டிற்கு வந்துவிட்டு அதன் பிறகு தான்சென்றார். அவர் சிப்ட் வேலை முடித்துவிட்டு தூக்க கலக்கத்தில் வாகனத்தை முந்த நினைத்ததால் விபத்துஏற்பட்டது என்றால் சரியல்ல. விபத்திற்கும் எதிரியின் கவனக்குறைவுக்கும்

காரணம் கிடையாது என்றாலும் இறந்தவர் கவனக்குறைவாக வந்து விபத்தை ஏற்படுத்திக்கொண்டார் என்றாலும் இறந்தவர் எனது அண்ணன் என்பதால்போலீசார் கேட்டுக்கொண்டதற்கு அவருக்கு ஆதரவாக சாட்சியம்அளிக்கிறேன்என்றால் சரியல்ல. போலீசார் கேட்டுக்கொண்டதால் கையொப்பம் செய்து சாட்சியம் அளிக்கிறேன் என்றால்சரியல்ல.